தொழில்நுட்பக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள்

முன்னிலை: திரு.கே.விவேகானந்தன், இ.ஆ.ப.,
தொழில்நுட்பக் கல்வி இயக்குநர்

செயல்முறை ஆணை எண் 13476/டி3/2009, நாள் 23.02.2021

பொருள்: நிர்வாகம் - தொழில்நுட்பக் கல்வித் துறை – தொழில்நுட்பக் கல்வி இயக்ககம், சென்னை – (லேட்) திரு.யோ.கிறிஸ்டோபர் பாபு, பட்டதாரி அட்டவணையாளரின் வாரிசுதாரர்(மகள்) திருமதி.கி.ஷீ.ஆஷா பிரியதர்ஷினி என்பவருக்கு புரசைவாக்கம், அரசினர் பாலிடெக்னிக் கல்லூரியில் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் பதவியில் பணி நியமனம் வழங்கியது - பணிவரன்முறை செய்து ஆணை வழங்குதல்.

பார்வை: அரசாணை (3ப) எண்.17 உயர்கல்வித் (சி2) துறை, நாள் 24.12.2020

----------

பார்வையில் காணும் அரசாணையில், புரசைவாக்கம், அரசினர் பாலிடெக்னிக் கல்லூரியில் கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்கப்பட்டு, இளநிலை உதவியாளராகப் பணிபுரிந்து வரும் திருமதி.கி.ஷீ.ஆஷா பிரியதர்ஷினி, என்பவருக்கு இளநிலை உதவியாளர் பதவியில், அவர் பணியில் சேர்ந்த நாளான 30.06.2016 முற்பகல் முதல் பணிவரன்முறைப்படுத்தி அரசால் ஆணை வழங்கப்பட்டுள்ளது. (நகல் இணைக்கப்படுகிறது.)

அதனைத் தொடர்ந்து, தமிழ்நாடு அரசுப் பணியாளர் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016 சட்டப்பிரிவு 28 (1)-ன்கீழ், அவர் இளநிலை உதவியாளர் பதவியில் பணியில் சேர்ந்த நாளான 30.06.2016 முற்பகல் முதல் பணிவரன்முறைப்படுத்தி ஆணைகள் வழங்கப்படுகின்றன.

தனியர், பணியில் சேர்ந்த நாள் முதல், மூன்றாண்டு பணிகாலத்திற்குள் இரண்டாண்டுகள் தகுதிகாண்பருவத்தை நிறைவு செய்ய வேண்டும். மேலும், தகுதிகாண்பருவகாலத்திற்குள் பவானிசாகர் அடிப்படைப் பயிற்சியில் கட்டாயம் தேர்ச்சி பெற வேண்டும்.

இணைப்பு: பார்வையில் காணும் அரசாணை

ஒம்/- கே.விவேகானந்தன்
தொழில்நுட்பக் கல்வி இயக்குநர்

பெறுநர்
திருமதி.கி.ஷீ.ஆஷா பிரியதர்ஷினி,
இளநிலை உதவியாளர்,
அரசினர் பாலிடெக்னிக் கல்லூரி,
புரசைவாக்கம் (முதல்வர் வழியாக)

நகல் :
முதல்வர்,
அரசினர் பாலிடெக்னிக் கல்லூரி,
புரசைவாக்கம்
டி3/ தொகுப்பு கோப்பு

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது.//

உதவி இயக்குநர் (நிர்வாகம்)

OFFICE OF THE PRINCIPAL GOVT. POLYTECHNIC, PURASAWALKAM, CHENNAI
0703
12 MAR 2021

666/அ1/2016

## சுருக்கம்

பொதுப் பணிகள் – உயர்கல்வி – தொழில்நுட்பக் கல்வி – சென்னை, தொழில்நுட்பக் கல்வி இயக்ககத்தில் பட்டதாரி அட்டவணையாளராக பணிபுரிந்து மறைந்த திரு. யோ. கிறிஸ்டோபர் பாபு, வாரிசுதாரர் திருமதி. கி. ஷீ. ஆஷா பிரியதர்ஷினி – கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணி நியமனம் – பணி வரன்முறை செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

உயர்கல்வி (சி2) துறை

அரசாணை (3 ப) எண்.17

நாள்: 24.12.2020
சார்வரி வருடம், மார்கழி – 9
திருவள்ளுவர் ஆண்டு 2051

படிக்க:-

தொழில்நுட்பக் கல்வி ஆணையரின் கடித எண்.13476/டி3/2009, நாள் 28.9.2017, 17.7.2018, 12.11.2019 மற்றும் 7.1.2020.

-----

ஆணை:–

மேலே படிக்கப்பட்ட கடிதத்தில் சென்னை, தொழில்நுட்பக் கல்வி ஆணையர் பின்வருமாறு தெரிவித்திருந்தார்:–

> சென்னை, தொழில்நுட்பக் கல்வி இயக்ககத்தில் பட்டதாரி அட்டவணையாளராக பணிபுரிந்த திரு. யோ. கிறிஸ்டோபர் பாபு என்பவர் 1.5.2008 அன்று பணியிலிருக்கும் போது இறந்துவிட்டார். இறந்த அரசு ஊழியரின் உத்தேசமான பணி ஓய்வு பெறும் நாள் 30.4.2014 ஆகும். அவரின் வாரிசுதாரர் (மகள்) திருமதி. கி. ஷீ. ஆஷா பிரியதர்ஷினி கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யுமாறு கோரியிருந்தார், மறைந்த அரசு ஊழியரின் குடும்ப வருமானச் சான்றிதழை இணைத்து, அதில் அக்குடும்பத்தின் ஆண்டு வருமானம் 1,12,368/– என அறிவிக்கை செய்யப்பட்டுள்ளது. திருமதி. கி.ஷீ.ஆஷா பிரியதர்ஷினி, மார்ச் மாதம் 2009–இல் பத்தாம் வகுப்பு கல்வித் தகுதியில் தேர்வு பெற்றுள்ளார். தனியர் செல்வி. ஆஷா பிரியதர்ஷினி என்பவர் பொருட்டு கருணை அடிப்படையில் அவரது தாயார் திருமதி.T.ஷீலா அவரது மகளுக்கு பணி கோரிய விண்ணப்பம் மூன்று ஆண்டு கால கெடுவிற்குள் (27.4.2009) பெறப்பட்ட நாளில் தனியர் 18 வயதினை நிறைவு செய்யாத போதிலும், அரசாணை (நிலை) எண்.155, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை, நாள் 10.12.2014–ன் அடிப்படையில் தனியர் கருணை அடிப்படையில் பணி நியமனம் பெறுவதற்கு தகுதியுடையராகிறார். மேலும், விண்ணப்பம் செய்த நாளில் 10–ம் வகுப்பு (SSLC) கல்வித் தகுதியினை பெற்றுள்ள நிலையில், இத்தனியர் கருணை அடிப்படையில் பணி நியமனம் பெறுவதற்கு நடைமுறையிலுள்ள அரசாணைகளின்படி இதர தகுதிகளையும் பூர்த்தி செய்கிறாரா என்பதை உறுதி செய்துக்கொண்டு அவருக்கு தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலைப் பணிகளுக்கான பொதுவிதி 10 (a) (1) இன் கீழ் தற்காலிக இளநிலை உதவியாளராக தொழில்நுட்பக் கல்வி ஆணையரின் செயல்முறை ஆணை எண்.13476/டி3/2009, நாள் 27.6.2016–ல் நியமன ஆணை வழங்கப்பட்டுள்ளது.

2. எனவே, தனியர் இளநிலை உதவியாளராக பணியில் சேர்ந்த நாளான 30.6.2016 முற்பகல் முதல் பணிவரன்முறைப்படுத்தி தக்க அரசாணை வழங்கும்படியும் தொழில் நுட்பக் கல்வி ஆணையர் அரசைக் கோரியுள்ளார்.

3. தொழில்நுட்பக் கல்வி ஆணையரின் கருத்துருவானது அரசால் நன்கு ஆய்வு செய்யப்பட்டது. இந்நிலையில், திருமதி. கி. ஷீ. ஆஷா பிரியதர்ஷினி என்பவருக்கு கருணை அடிப்படையில் தொழில்நுட்ப கல்வித் துறையின் கீழ் உள்ள சென்னை, புரசைவாக்கம், அரசினர் பாலிடெக்னிக் கல்லூரியில் இளநிலை உதவியாளராக பணியில் சேர்ந்த நாளான 30.06.2016 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்ய ஏதுவாக தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016–ல் பிரிவு 20(6)(b) (வயது), பிரிவு 15 (திருமணமான பெண்) மற்றும் 28(2) (பணி நியமன நாளில் இருந்து பணப்பயன் வழங்குதல்) ஆகிய பிரிவுகளை "தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016" பிரிவு 58–ன் கீழ் ஆளுநர் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி தனியர் பொருட்டு தளர்வு செய்தும் குறைந்தபட்ச வயது குறித்து அரசாணை (நிலை) எண். 18, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்பு (க்யூ.1) துறை, நாள் 23.1.2020–ற்கு விலக்களித்தும் அன்னார் அப்பணியிடத்திற்கு தேவையான உடல்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் பணிவரன்முறை செய்ய அரசு முடிவெடுத்து அவ்வாறே ஆணையிடுகிறது. இவ்வாறு முன் தேதியிட்டு பணிவரன்முறை செய்யப்படுவதால் அவருக்குரிய ஆண்டு ஊதிய உயர்வுகள் மற்றும் ஊதிய நிலுவைகள் ஏதும் இருப்பின் அவற்றைப் பெற விதிகளின்படி தனியர் தகுதி உடையவராகிறார்.

4. இவ்வரசாணை பணியாளர் மற்றும் நிருவாக சீர்திருத்த துறையின் அ.சா.எண்.24156/ஜி1/2020, நாள் 14.10.2020–ல் மற்றும் தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறையின் அ.சா.எண்.16483/ட்டி.1/2020, நாள் 31.10.2020–ல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

அபூர்வா
அரசு முதன்மை செயலாளர்

பெறுநர்
தொழில்நுட்பக் கல்வி இயக்குநர், சென்னை–25.
திருமதி. கி. ஷீ. ஆஷா பிரியதர்ஷினி, சென்னை, புரசைவாக்கம் அரசினர் பாலிடெக்னிக் கல்லூரி,
(தொழில்நுட்பக் கல்வி இயக்குநர் வழியாக)

<u>நகல்</u>
தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்பு (ட்டி1) துறை, சென்னை–9.
பணியாளர் மற்றும் நிருவாக சீர்திருத்த (ஜி1) துறை, சென்னை–9.
முதன்மைச் செயலாளரின் நேர்முக உதவியாளர், உயர்கல்வித்துறை, சென்னை–9.
இருப்புக் கோப்பு / உதிரி.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்